**செய்தி வெளியீடு எண்: 184** **நாள்: 28.02.2019**

**இன்று (28.2.2019), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் திருப்பூரில் நடைபெற்ற அத்திக்கடவு–அவினாசி திட்டத்தின் அடிக்கல் நாட்டு விழாவில் ஆற்றிய உரை:–**

அத்திக்கடவு–அவினாசி திட்டத்திற்கு வித்திட்ட மாண்புமிகு அம்மா தெய்வத்தை வணங்கி,

கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்ட மக்களின் நீண்ட கால கனவான அத்திக்கடவு–அவினாசி திட்டத்தினை நிறைவேற்றும் வகையில், அத்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டும் விழாவில் கலந்து கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

வரலாறு படைக்கும் இந்த இனிய விழாவில் தலைமையேற்று உரையாற்றிய மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு ப.தனபால் அவர்கள் அவிநாசி தொகுதியின் சட்டப்பேரவை உறுப்பினர் சட்டப்பேரவையினுடைய தலைவராக இருக்கின்றார், அவர் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவர். நானும் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவர். இருவரும் தொடர்ந்து வலியுறுத்தி, அதற்கு பக்கபலமாக திருப்பூர் மாவட்ட அமைச்சர், கோயம்புத்தூர் மாவட்ட அமைச்சர், ஈரோடு மாவட்ட அமைச்சர், இந்த 3 மாவட்டங்களிலிருக்கின்ற நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், விவசாயப் பிரதிநிதிகள் எல்லோரும் இணைந்து, இன்றையதினம் எங்கள் சேலம் மாவட்டத்திலிருக்கும் இருவரும் உங்களுக்கு ஒரு அற்புதமான திட்டத்தை துவக்கி வைக்கின்ற பாக்கியத்தை இறைவன் கொடுத்ததற்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு,

இந்த சிறப்பான நிகழ்ச்சியில் தலைமையேற்று, சிறப்புரையாற்றிய மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் **திரு. ப.தனபால் அவர்களே!**
மாண்புமிகு பள்ளிக்கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் **திரு.கே.ஏ.செங்கோட்டையன் அவர்களே!**
மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் **திரு.எஸ்.பி.வேலுமணி அவர்களே!**
மாண்புமிகு சுற்றுச்சூழல்துறை அமைச்சர் **திரு.கே.சி.கருப்பண்ணன் அவர்களே!**
மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர்
**திரு.உடுமலை K.ராதாகிருஷ்ணன் அவர்களே!**
மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர்
**திரு.பொள்ளாச்சி வி.ஜெயராமன் அவர்களே!**

**மரியாதைக்குரிய நாடாளுமன்ற உறுப்பினர்கள்**
**திரு.சி.மகேந்திரன் அவர்களே!**
**திரு.சி.கோபாலகிருஷ்ணன் அவர்களே!**
**திரு.ஏ.கே.செல்வராஜ் அவர்களே!**
**திரு.எஸ்.செல்வகுமார் சின்னையன் அவர்களே!**
**திருமதி வி.சத்தியபாமா அவர்களே!**
மாநிலங்களவை உறுப்பினர்
**பெரியவர் எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியம் அவர்களே!**

**மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்கள்**
**திரு.தோப்பு என்.டி.வெங்கடாசலம் அவர்களே!**
**திரு.விஜயகுமார் அவர்களே!**
**திரு.குணசேகரன் அவர்களே!**
**திரு.தனியரசு அவர்களே!**
**திரு.வி.ஆர்.ஜி.அருண்குமார் அவர்களே!**
**திரு.சின்னராஜ் அவர்களே!**
**திரு.அம்மன் கே.அர்ச்சுணன் அவர்களே!**
**திரு.ஆர்.கனகராஜ் அவர்களே!**
**திருமதி கஸ்தூரி வாசு அவர்களே!**
**திரு.சிவசுப்பிரமணியம் அவர்களே!**
**திரு.அந்தியூர் இ.ஆர்.ராஜா அவர்களே!**
**திரு.கே.ஆர்.ராஜாகிருஷ்ணன் அவர்களே!**
**திரு.சி.ஈஸ்வரன் அவர்களே!**

**முன்னாள் அமைச்சர்**
**திரு.எம்.எஸ்.ஆனந்தன் அவர்களே!**
**திரு.வேலுச்சாமி அவர்களே!**

**முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்கள்**
**திரு.என்.எஸ்.என்.நடராஜன் அவர்களே!**

**திரு.கருப்பசாமி அவர்களே!**
**திரு.மகாலிங்கம் அவர்களே!**

**அத்திக்கடவு அவிநாசி கூட்டமைப்பைச் சேர்ந்த**
**பெரியவர் திரு.அம்பலவாணன் அவர்களே!**
**திரு.டி.கே.பெரியசாமி அவர்களே!**
**திரு.முருகபூபதி அவர்களே!**
**திரு.எஸ்.எம்.ஆர்.நடராஜ் அவர்களே!**
**திரு.ராமச்சந்திரன் அவர்களே!**
**திரு.தாமோதரன் அவர்களே!**
**திருமதி.ஆனந்தி அவர்களே!**
**திரு.பொன்னுகுட்டி அவர்களே!**

மற்றும் பல்வேறு விவசாய சங்கத்தின் பிரதிநிதிகளே!
விவசாயிகளே!
அரசு உயர் அதிகாரிகளே!
கழக நிர்வாகிகளே!
வரவேற்புரையாற்றிய அரசு முதன்மைச் செயலாளர் அவர்களே!
பெரியோர்களே! தாய்மார்களே!
பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே!

அனைவருக்கும் பணிவான வணக்கத்தை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் பெரும்பாலான மக்கள் வேளாண்மைத் தொழிலையே நம்பி இருப்பதால், வேளாண் பெருமக்கள் வாழ்வில் வளம் பெறவும், அவர்களின் வாழ்வாதாரம் செழிக்கவும், வேளாண் உற்பத்தித் திறனையும், வேளாண் பெருமக்களின் வருமானத்தையும் அதிகப்படுத்துவற்கான பல்வேறு திட்டங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்தி வருகிறது. நீடித்த வேளாண் வளர்ச்சியை அடைவதற்கு பாசனத்திற்கான நீர்வள அமைப்புகளை வலுப்படுத்துவது இன்றியமையாதது.

அந்த வகையில், மாநிலத்தில் பாசன நிலங்களுக்கு ஆதாரமாக உள்ள பாசன உள்கட்டமைப்புகளை நவீனப்படுத்தி, பாசனக் கால்வாய் அமைப்புகளை புனரமைத்து, அவற்றை நல்ல நிலைக்கு கொண்டு வரும் நோக்கத்துடன் உலக வங்கி உதவியுடன்

நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டம் மாண்புமிகு அம்மா அவர்களால் தொடங்கப்பட்டு, தற்பொழுதும் செயல்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் நீர்வள ஆதாரத் துறை, வேளாண்மைத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, மீன்வளத் துறை, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், தோட்டக்கலைத் துறை, வேளாண்மை பொறியியல் துறை மற்றும் வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத் துறை ஆகிய துறைகளை ஒருங்கிணைத்து விவசாயிகளின் வாழ்வாதாரம் மேம்படும் வகையில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டமாகும்.

மாண்புமிகு அம்மா அவர்களும். மாண்புமிகு அம்மாவின் அரசும், விவசாய பெருமக்களின் கோரிக்கைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றி வருகிறது. அந்த வகையில், கோவை, திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்ட விவசாய மக்களின் நீண்டநாள் கோரிக்கையான அத்திக்கடவு–அவினாசி திட்டத்தினை செயல்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை பெருமையுடன் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

2016 சட்டமன்றத் தேர்தலில் கோவையில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள் பேசியதை நான் இந்த நேரத்தில் நினைவுகூர கடமைப்பட்டிருக்கின்றேன்:

‘‘அத்திக்கடவு–அவினாசி திட்டம் பற்றி சில விவரங்களை தெரிவிக்க விரும்புகிறேன். பவானி ஆற்றின் உபரிநீரை பல நீர்ஆதாரங்களுக்கு எடுத்துச் செல்லும் வகையில் அத்திக்கடவு–அவினாசி கால்வாய் திட்டம் 1,862 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்டு, வெள்ள மேலாண்மைத் திட்டத்தின் கீழ், நிதி உதவி பெற திமுக அங்கம் வகித்த முந்தைய காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசுக்கு 2013–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மாண்புமிகு அம்மா அரசால் அனுப்பப்பட்டது. இதனை மத்திய அரசு அன்றையதினம் நிராகரித்து விட்டது.

மேலும் 2016 சட்டமன்றத் தேர்தலுக்கான கழகத்தின் தேர்தல் அறிக்கையிலும் அத்திக்கடவு–அவினாசி திட்டம் செயல்படுத்தப்படும் என மாண்புமிகு அம்மா அவர்கள் தெரிவித்ததை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். அம்மா அவர்கள் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், மாண்புமிகு அம்மாவின் அரசும் மாநிலத்தின் நிதி ஆதாரத்தில் இருந்தே இத்திட்டத்திற்கான முழுமையான நிதியை ஒதுக்கீடு செய்து, விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து, அதன்படியே ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்யப்பட்டு, இப்பகுதி மக்களின் பல ஆண்டு கனவான அத்திக்கடவு–அவிநாசி திட்டத்திற்கு இன்று அடிக்கல் நாட்டு விழா நடைபெறுகிறது என்பதை கூறிக் கொள்வதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தத் திட்டம் கடந்து வந்த நீண்ட நெடிய பாதையை இத்தருணத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்தத் திட்டம் மிகப் பெரிய திட்டம். இந்தத் திட்டம் மிக விரைவாக செயல்பட்டு இப்பொழுது உங்களது ஆசியோடு இன்றையதினம் அடிக்கல் நாட்டப்படுகிறது. இன்னும் இரண்டே ஆண்டுகளில் குறித்த காலத்தில் இதே பகுதியில் இந்தத் திட்டத்தை திறந்து வைப்பேன் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்று சொன்னால், மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அரசைப் பொறுத்தவரைக்கும் இத்திட்டத்தை தீட்டி, எப்படி செயல்படுத்த வேண்டுமென்று முன்கூட்டியே அறிந்து அதன் வாயிலாக இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

திருப்பூர் மாவட்டத்தில் உள்ள அவினாசி வட்டம், ஆண்டிற்கு சராசரி 600 மி.மீ. முதல் 700 மி.மீ. வரையிலான குறைந்த மழைப்பொழிவைப் பெற்றுவரும் ஒரு வறண்ட பகுதி ஆகும். இந்த வட்டத்தின் ஒரு பகுதியில் பவானி ஆறு சென்றாலும்,

இதன் பிற பகுதிகளுக்கு இவ்வாற்றின் நீர் சென்று பயனடையும் வழி வகைகள் ஏதும் இதுவரை இல்லை.

மேலும், அவினாசி தவிர பிற வறண்ட பகுதியில் வசிக்கும் மக்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டு வருவதாலும், இப்பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் மிகவும் குறைந்துவிட்ட காரணத்தாலும், பவானி ஆற்றின் உபரிநீரை இப்பகுதிகளுக்கு திருப்பி, குளங்கள் மற்றும் குட்டைகளுக்கு நீர் வழங்குவதன் மூலம், பாசன வசதி அளித்திட இப்பகுதி மக்கள் நீண்ட காலமாக கோரிக்கை வைத்தனர். இப்பகுதி மக்களுக்கு உதவும் வகையில் இத்திட்டம் மாற்றியமைக்கப்பட்டு "காளிங்கராயன் அணைக்கட்டின் கீழ்புறத்திலிருந்து, பவானி ஆற்றின் உபரி நீரை, நீரேற்றுப் பாசன முறையின் மூலம் கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்ட மக்கள் பயன்பெறும் வகையில் அத்திக்கடவு–அவினாசி பாசனம், நிலத்தடி நீர் செறிவூட்டுதல் மற்றும் குடிநீர் வழங்கும் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

காளிங்கராயன் அணைக்கட்டின் கீழ்புறத்தில் 230 மீட்டர் தொலைவில், பவானி ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைத்து, அதிலிருந்து, நீரை, நீரேற்றம் மூலம், குளம், குட்டைகளை நிரப்பும் வகையில் இத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் 9 வட்டங்களிலுள்ள 32 பொதுப்பணித் துறை ஏரிகள், 42 ஊராட்சி ஒன்றிய குளங்கள் மற்றும் 971 கசிவு நீர்க் குட்டைகளை நிரப்ப உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தினால் நிலத்தடி நீராதாரம் மேம்படுத்தப்படுவதுடன், 24,468 ஏக்கர் நிலங்களுக்கு மறைமுக பாசன வசதியும் உறுதி செய்யப்படுகிறது.

இத்திட்டத்திற்கான மதிப்பீடு மற்றும் விரிவான திட்ட அறிக்கையின் அடிப்படையில் 1,652 கோடி ரூபாய்க்கு மாநில நிதியின் கீழ் மேற்கொள்ள

28.3.2018 அன்று நிர்வாக ஒப்புதல் மாண்புமிகு அம்மாவின் அரசால் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை செயல்படுத்திட 10.7.2018 அன்று அரசாணை வழங்கப்பட்டு, அவினாசியில் ஒரு வட்ட அலுவலகமும், இரண்டு கோட்ட அலுவலகங்களும் செயல்பட்டு வருகின்றன.

இத்திட்டத்திற்கான ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்டு, இம்மாத இறுதிக்குள் இந்த திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்படும் என்று நான் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் உறுப்பினர் ஒருவரின் கேள்விக்கு விளக்கம் அளிக்கும்போது தெரிவித்தேன். மாண்புமிகு அம்மா அவர்கள் தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையிலும், சட்டமன்றத்தில் நான் அறிவித்ததை செயல்படுத்தும் வகையிலும், அத்திக்கடவு–அவினாசி திட்டத்திற்கு இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்திட்டத்தில் ஏற்படும் மின் கட்டண செலவை ஈடு செய்யும் வகையில் 30 மெகாவாட் அளவிற்கு சூரிய ஒளி மூலம் மின்சாரம் தயாரித்து அருகிலுள்ள தமிழ்நாடு மின் வாரிய உபநிலையத்திற்கு வழங்குவதற்கான, சூரியஒளி மின் திட்டத்தினை 132.80 கோடி ரூபாய் மதிப்பீட்டில், அரசு புறம்போக்கு நிலங்களில் நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது என்ற விவரத்தை தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் இப்பொழுது இந்தத் திட்டத்தை நாங்கள் நிறைவேற்றிவிடுவோம். ஒரு காலத்தில், விவசாயிகள் இந்த மின்கட்டணத்தை செலுத்த வேண்டுமென்ற ஒரு நிலை ஏற்பட்டால், விவசாயிகள் பாதிக்கப்பட்டு விடுவார்கள். எனவே, அதிலிருந்து அவர்களை மீட்டெடுக்க வேண்டுமென்பதற்காக இந்த சூரிய சக்தி மின்திட்டத்தை ரூபாய் 132 கோடி மதிப்பீட்டில் அரசே திட்டத்தை தயார் செய்து, அந்தத் திட்டத்தின் மூலமாக உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரத்தை இந்த நீரேற்று

மின் மோட்டாருக்கு பயன்படுத்தக் கூடிய ஒரு சூழ்நிலையை நாங்கள் உருவாக்கியிருக்கின்றோம்.

அதேபோல, அத்திக்கடவு–அவிநாசி திட்டத்தைப் போடுகின்றபொழுது, அத்திட்டம் மாற்றியமைக்கப்பட்டதன் விளைவாக அந்த பகுதி மலையடிவாரத்திலிருந்து சில பகுதிகள் விடுபட்டு விட்டன. அவ்வாறு விடுபட்ட காரைமடை, பெரியநாயக்கன்பாளையம், தொண்டாமுத்தூர் மற்றும் சர்க்கார் சாமக்குளம் ஒன்றியத்தில் உள்ள 450 குளம், குட்டைகளை நிரப்பும் வகையில் முதற்கட்ட ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்தப் பணிகளையும் இத்திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

பவானி ஆற்றிலிருந்து வெளியேற்றப்படும் நீரினைக் கொண்டு, இந்தத் திட்டத்தின் இரண்டாம் கட்டமாக மேற்சொன்ன பகுதிகளும் பயனடையும்வண்ணம் மாண்புமிகு அம்மாவின் அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு அம்மாவின் அரசைப் பொறுத்தவரை, எந்த திட்டத்தை அறிவித்தாலும் அந்தத் திட்டம் விரைந்து செயல்படுத்தப்படும் என்பதை இங்கே பெருமையுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். “நாங்கள் சொன்னதைத்தான், செய்வோம். செய்வதைத்தான் சொல்வோம். சொல்லாததையும் செய்வோம்’’, என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் அமுதமொழிக்கு இணங்க மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

இன்று அடிக்கல் நாட்டப்பட்ட அத்திக்கடவு–அவினாசி திட்டப் பணிகள் போர்க்கால அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு, விரைவில் இந்தத் திட்டம் முடிக்கப்பெற்று மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும் என்பதை உறுதியுடன்

தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம், ஈரோடு, திருப்பூர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களின் நிலத்தடி நீர் செறிவூட்டுதலின்படி, தேவை மற்றும் பாசனத்திற்கு தேவையான நீர் பெருகும். இதனால், இப்பகுதிகளில் வாழும் விவசாயப் பெருங்குடி மக்கள் மிகவும் பயனடைவார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்க விரும்புகின்றேன்.

இன்னொரு மிகப்பெரிய திட்டமான கோதாவரி–காவிரி இணைப்பை நிச்சயமாக அம்மாவினுடைய அரசால் நிறைவேற்றித் தரப்படும்.

கிட்டத்தட்ட 6 மாதத்திற்கு முன்பு, மாண்புமிகு மத்திய நீர்வளம் மற்றும் தரை வழிப் போக்குவரத்து துறை அமைச்சர் திரு.நிதின் கட்கரி அவர்கள் சென்னைக்கு வந்திருந்தபொழுது நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில், எப்பொழுதும், பருவ மழையை நம்பியும், அண்டை மாநிலங்களிலிருந்து வருகின்ற நீரை நம்பியும் தான் தமிழ்நாடு வேளாண் பெருமக்கள் வேளாண் பணியை மேற்கொள்ள வேண்டிய ஒரு துரதிஷ்ட நிலை இருப்பதால், அதற்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண வேண்டுமென்று நான் தெரிவித்தேன். இதுகுறித்து அதற்கும் ஒரு வருடத்திற்கு முன்பே நான் டெல்லி சென்றிருந்தபொழுது, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடத்தும், மாண்புமிகு மத்திய நீர்வளம் மற்றும் தரை வழிப் போக்குவரத்து துறை அமைச்சர் அவர்களிடத்தும் ஒரு கடிதத்தை கொடுத்தேன். கோதாவரி நதியிலிருந்து ஆண்டொன்றுக்கு 2500 டி.எம்.சி. தண்ணீர் வீணாகக் கடலில் கலப்பதை, தெலுங்கானா, ஆந்திரா மாநிலங்களின் வழியாக தமிழ்நாட்டிற்கு கொண்டு வந்து, மூன்று மாநிலங்களும் பயன்பெறும் வகையில் இந்தத் திட்டம் வடிவமைக்கப்படுவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படுகிறது. அவ்வாறு தமிழ்நாட்டிற்கு தண்ணீர் கொண்டு வரப்படும்பொழுது, 200 டி.எம்.சி. தண்ணீர் கோதாவரியிலிருந்து காவிரிக்கு கொண்டு வரப்படும் என்ற ஒரு மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்தார். அப்படிப்பட்ட காலம்

வருகின்றபொழுது மேட்டூரில் நமக்கு தண்ணீர் உபரியாகக் கிடைக்கும். அந்த உபரி நீர் பல்வேறு மாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்படும் சூழ்நிலை ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அம்மாவின் அரசு, குடிமராமத்துத் திட்டம் என்ற அற்புதமான திட்டத்தைக் கொண்டு வந்து, பல ஆண்டுகாலமாக ஏரிகள், குளங்கள், அணைகளிலே படிந்துள்ள வண்டல்மண்ணை தூர்வாருவதன் மூலம், பருவ காலங்களிலே பொழிகின்ற மழைநீரை தேக்கி வைக்க முதற்கட்டமாக ரூபாய் 100 கோடி ஒதுக்கி 1519 ஏரிகளை தேர்வு செய்து, அத்திட்டத்தில், முழுக்க, முழுக்க விவசாயிகளை ஈடுபடச் செய்து நிறைவேற்றினோம். இதன்மூலம் கிடைக்கும் வண்டல் மண்ணை இலவசமாக எடுத்து இயற்கை உரமாக விவசாயிகள் பயன்படுத்துகின்றார்கள். இதனால், விவசாயத்திற்கும், குடிநீருக்கும் தேவையான நீர் கிடைக்கின்றது. மேலும், ரூபாய் 328 கோடி ஒதுக்கீடு செய்து இரண்டாம் கட்டமாக 1514 ஏரிகளை தேர்வு செய்து அந்தத் திட்டத்தை விரிவுபடுத்தியிருக்கின்றோம்.

அதுமட்டுமல்ல, மூன்று ஆண்டுகாலத் திட்டமாக, ஓடைகள், நதிகளின் வழியாக ஓடுகின்ற நீர் பருவமழை காலங்களில் அதிகமாக மழை பொழிகின்றபொழுது கிடைக்கின்ற நீர் கடலிலே கலப்பதைத் தடுப்பதற்கு எந்தெந்த பகுதிகளில் தடுப்பணை கட்டலாம் என்பதை ஆராய்ந்து, ஆய்வு செய்து தடுப்பணை கட்டுவதற்கு ரூபாய் 1000 கோடி நிதி ஒதுக்கி, இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றோம்.

மேலும், காவிரியிலிருந்து கடலில் கலக்கும் நீரினை சேமிப்பதற்காக, காவிரி நதியில் மூன்று, நான்கு இடங்களில் தடுப்பணை கட்டி 1.5 டி.எம்.சி. தேக்கி வைப்பதற்கும் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

நீர் மேலாண்மைக்காக ஓய்வு பெற்ற திறமையான 4 தலைமை பொறியார்கள் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டு, அக்குழுவினர் உபரி நீரை சேமித்து பயன்படுத்துவதற்குண்டான ஆய்வினை தமிழகம் முழுவதும் மேற்கொண்டு வருகிறார்கள்.

பாசன கால்வாய்களை மேம்படுத்துவதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கான்கிரீட் கால்வாய்களை அமைக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்னும் பல்வேறு கால்வாய்களையும் கான்கிரீட் கால்வாயாக அமைப்பதினால் நீர்க் கசிவு தடுக்கப்பட்டு, விவசாயத்திற்குத் தேவையான நீர் கிடைக்கின்றது.

கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தென்னைக்கு போதிய விலை கிடைக்காத காரணத்தினால், மாற்று வழி கண்டு, தென்னை விவசாயிகளுக்கு இரட்டிப்பு வருமானம் பெருக வழிவகை செய்ய வேண்டுமென்று வைத்த கோரிக்கையை ஏற்று, நீரா பானம் தயாரிக்க அனுமதி வழங்கிய அரசு அம்மாவினுடைய அரசு.

அதோடு, சென்னைக்கு அருகில் ரூபாய் 2000 கோடியில் மிகப் பிரம்மாண்டமான உணவுப் பூங்கா அமைக்கிறோம். நம்முடைய வேளாண் பெருமக்கள், விவசாயப் பெருமக்கள் தங்களுடைய விளை பொருட்களை உற்பத்தி செய்கின்ற காய்கறிகள், பழங்கள் அதிக லாபத்தோடு விற்பனை செய்ய உணவுப் பூங்காவை அம்மாவின் அரசு, தனியார் பங்களிப்போடு சென்னைக்கு அருகிலே, கிட்டத்தட்ட 400 ஏக்கர் பரப்பளவில் அமைக்க இருக்கின்றது. மேலும், 10 மாவட்டங்களில் உணவுப் பூங்கா அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றோம்.

விவசாயிகளுக்குத் தேவையான இடுபொருள் மானியம், வேளாண் கருவிகள் வாங்குவதற்கு மானியம், டிராக்டர் வாங்குவதற்கு மானியம் கொடுக்கின்றோம்.

நுண்ணுயிர் பாசனத்திற்காக சிறு, குறு விவசாயிகளுக்கு பாசனத்திற்கு 100 விழுக்காடு மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 விழுக்காடு மானியமும் கொடுக்கின்றோம்.

இதுவரை இல்லாத அளவிற்கு, நடப்பாண்டில் மட்டும் 2 இலட்சத்து 20 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் நுண்ணுயிர் பாசனம் அமைத்திட ரூபாய் 1,149 கோடி அளவிற்கு பணியனை வழங்கப்பட்டு இத்திட்டம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. 2019–2020ஆம் ஆண்டில் மேலும் 2 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் செயல்படுத்துவதற்காக ரூபாய் 1377 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வேளாண் கருவிகள் வாங்குவதற்கும் அம்மாவினுடைய அரசு நிதி உதவி வழங்கி வருகிறது. விவசாயிகள் வேளாண் இயந்திரங்களை அதிக வாடகை கொடுத்து பயன்படுத்துவதை தவிர்க்க, வரும் நிதியாண்டில், 128 வட்டார அளவிலான வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்களையும், 360 கிராம அளவிலான வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்களையும் கொண்ட கூட்டுப் பண்ணை திட்டத்தை உருவாக்கித் தந்திருக்கின்றோம்.

அதேபோல, மாநிலத்தில், 4 இலட்சம் சிறு, குறு விவசாயிகளை 20 ஆயிரம் குழுக்களாக இணைத்து, இக்குழுக்கள் நான்காயிரம் உழவர் உற்பத்தியாளர் குழுக்களாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் 2017–2018ஆம் ஆண்டில், ஒவ்வொரு குழுவிலும் 100 விவசாயிகளை உள்ளடக்கி, குழு ஒன்றுக்கு ரூபாய் 5 இலட்சம் தொகுப்பு நிதியாக வழங்கப்பட்டது. இக்குழுக்கள் ரூபாய் 100 கோடி மதிப்பில் தங்களுக்குத் தேவையான, விலைமதிப்புமிக்க 8920 பண்ணை இயந்திரங்களை வாங்கியதன் மூலம் 2 இலட்சம் சிறு, குறு விவசாயிகள் பயனடைந்துள்ளார்கள். இத்திட்டத்தின் வெற்றியைத் தொடர்ந்து 2018–2019ஆம் ஆண்டில் மேலும் 2 இலட்சம் சிறு, குறு விவசாயிகள் பயன் பெறுகின்ற வகையில், மாநில

அரசு ரூபாய் 100 கோடியே 42 இலட்சம் நிதி ஒதுக்கி இயந்திரங்களை வாங்கும் பணி இப்பொழுது நடைபெற்று வருகிறது.

சூரிய மின் சக்தி மூலமாக இயங்கக் கூடிய மின் மோட்டார்களை விவசாயிகளுக்கு வழங்க அம்மாவினுடைய அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இதற்காக 90 விழுக்காடு மானியம் வழங்கப்படுகிறது. இதுவரை 3,826 சூரிய மின் சக்தியுடன் கூடிய பம்ப் செட்டுகள், ரூபாய் 143 கோடி 22 இலட்சம் மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. மின் மோட்டார்களுக்கு மட்டும் ரூபாய் 84 கோடி மானியம் கொடுத்திருக்கின்றோம். 10 குதிரை சக்தியுள்ள மின் மோட்டாரை, சூரிய மின் சக்தி மூலமாக இயக்குவதற்கு, 2000 பம்பு செட்டுகள் இந்த ஆண்டு விவசாயிகளுக்கு வழங்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூபாய் 2247 கோடி வறட்சி நிவாரணம் வழங்கிய ஒரே அரசு அம்மாவின் அரசு தான்.

விவசாயிகளுக்கு, பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் மூலமாக இந்தியாவிலேயே அதிக நிதியை, கிட்டத்தட்ட ரூபாய் 3400 கோடிக்கு மேல் இழப்பீட்டுத் தொகை பெற்றுத் தந்த அரசும் அம்மாவினுடைய அரசு தான்.

2018–2019ஆம் ஆண்டில் மட்டும் இதுவரை 23 இலட்சத்து 48 ஆயிரம் விவசாயிகள், 34 இலட்சத்து 49 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் பல்வேறு பயிர்களை காப்பீடு செய்துள்ளனர். 2018–2019ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக காப்பீட்டுக் கட்டணமாக, மாநில அரசின் பங்காக ரூபாய் 632 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு ராபி பருவ பயிர்கள் காப்பீட்டிலும் இணைத்துக் கொள்ளப்படுகிறது.

மாண்புமிகு அம்மாவின் அரசு, ரூபாய் 802 கோடியே 92 இலட்சம் மதிப்பீட்டில் மானாவாரி சிறப்பு தொகுப்புத் திட்டத்தை செயல்படுத்தியிருக்கிறது. ஒரு

இலட்சத்திற்கும் அதிகமாக பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்ட மக்காச்சோளப் பயிர்களை புழு தாக்குதலில் இருந்து காப்பதற்காக, ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறையில், பட்டு விவசாயிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது.

மாநில பேரிடர் நிவாரண நிதியின் கீழ் 35 சதவீத மகசூல் விளைவிற்கு அதிகமாகும் பட்சத்தில் பயிருக்கு ஹெக்டேருக்கு 13500 ரூபாய் மானாவரி பயிர் 7410 ரூபாயும் வழங்குவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது. மக்காச்சோளம் பயிரிட்டு மகசூல் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கெல்லாம் நாங்கள் இழப்பீடு கொடுத்திருக்கிறோம்.

உழவர் பாதுகாப்பு திட்டத்தில் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2016 ஆம் ஆண்டு இந்தத் திட்டத்தை கொண்டு வந்தார்கள். இன்றைக்கு இந்தத் திட்டத்தின் மூலமாக சிறு, குறு விவசாயிகள் பயனடைகின்றார்கள். இந்த 6 லட்சத்து 54 ஆயிரத்து 804 பயனாளிகளுக்கு 479 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

தைப்பொங்கலுக்கு அனைத்து குடும்பத்திற்கும் 1000 ரூபாய் வழங்கிய அரசு அம்மாவினுடைய அரசு. அதேபோல, விவசாயத் தொழிலாளர்கள், இன்னும் பல்வேறு தொழில் புரிகின்ற ஏழை குடும்பத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 2000 ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்த அறிவிப்பிற்கு இணங்க, வருகின்ற 4–ஆம் தேதி அந்தத் திட்டம் துவக்கிவைக்கப்படும்.

அதேபோல, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் சிறு, குறு விவசாயிகளுக்கு 4 மாதத்திற்கு ஒருமுறை 2000 ரூபாய் அளிக்கப்படும் என்ற அடிப்படையில் ஒரு வருடத்திற்கு 6000 ரூபாய் தருகிறார்கள். இப்பொழுது 2000 ரூபாய் கொடுத்து கிட்டத்தட்ட 60 லட்சம் விவசாயப் பெருங்குடி மக்கள் பயன்பெறுகிறார்கள். தொடர்ந்து ஐந்தாண்டுகளுக்கு அளிக்கப்படும். பிரதான் மந்திரி கிசான் நிதி திட்டத்தின் மூலமாக

கிட்டத்தட்ட ஒவ்வொரு சிறு, குறு விவசாயிகளுக்கும் 30,000 ரூபாய் வங்கிக் கணக்கில் வரும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

கொப்பரை தேங்காய்க்கு ஏற்கனவே, விலையை உயர்த்தவேண்டும் என்று கோரிக்கை வைத்தோம். மத்திய அரசு அதை உயர்த்தியும், அது போதாது என்று நமது சட்டப்பேரவை துணைத்தலைவர் அவர்கள், நமது அமைச்சர், சட்டப்பேரவை உறுப்பினர்கள் மற்றும் அந்தப் பகுதியில் இருக்கின்ற விவசாயிகளும் கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அந்தக் கோரிக்கையும் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு, கொப்பரை தேங்காய்க்கு மத்திய அரசு அதிகமாக விலையை நிர்ணயிக்க வேண்டும் என்ற கோரிக்கையும் மத்திய அரசுக்கு வைப்போம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தோட்டத் தொழிலாளர்களுடைய ஊதிய நிர்ணயம் குறித்து பேச்சுவார்த்தை நடக்கின்றது. அரசு தோட்டத் தொழிலாளர்களுடைய ஊதியத்தை உயர்த்தி வழங்க வேண்டும் என்று இந்த பகுதியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். தொழிற்சங்கம் தொடர்ந்து வைத்த கோரிக்கையின் அடிப்படையில், தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு தற்போது வழங்கப்படும் தின ஊதியம் ரூ. 311.62 உடன் கூடுதலாக ரூ.5 உயர்த்தி அளிக்குமாறு தோட்ட அதிபர் சங்கத்தை நான் கேட்டுக் கொண்டேன். அதன்படி, தற்போது தொழிலாளர்களுக்கு அளிக்கப்படும் தின ஊதியமான ரூ.311.62 உடன் ரூ.5 சேர்த்து ரூ. 316.62 என தின ஊதியமாக தொழிலாளர்களுக்கு 01.03.2019 முதல் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தனியார் தோட்ட தேயிலை எஸ்டேட் தொழிலாளர்கள் ரூ.311.62 பெற்று வருகின்ற நிலையில், தமிழ்நாடு முழுவதுமுள்ள அரசு தேயிலை தோட்டத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் தற்போது தங்களுக்கு கிடைக்கும் ரூ. 304.12 தினக்கூலியை தனியார் எஸ்டேட் தொழிலாளர்களுக்கு இணையாக

உயர்த்தி வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று, அரசு தேயிலை தோட்டத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் 01.03.2019 முதல் ரூ.12.50 உயர்த்தி ரூ.316.62–ஆக மாண்புமிகு அம்மாவின் அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாடு அரசு தேயிலைத் தோட்டத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் இந்த ஊதிய உயர்வினால் ஏற்படும் கூடுதல் செலவினத்தை அரசே ஏற்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இதன்மூலம் தமிழ்நாடு முழுவதும் உள்ள 62,883 தனியார் மற்றும் அரசு தேயிலை தோட்டத் தொழிலாளர்கள் பயன்பெறுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மருத்துவத் துறையிலும் மிகச் சிறந்த சாதனைகளை படைத்திருக்கின்றோம். திண்டுக்கல்லைச் சேர்ந்த, இரண்டு கைகளையும் இழந்த ஒருவருக்கு, இறந்தவர் ஒருவரின் உடலிலிருந்து எடுத்த இரண்டு கைகளையும் பொருத்தி நமது அரசு ஸ்டான்லி மருத்துவமனை மருத்துவர்கள் ஒரு வரலாற்றுச் சாதனை படைத்துள்ளனர். இந்தியாவில், உறுப்பு மாற்றுச் சிகிச்சை மூலம் இப்படிப்பட்ட அறுவை சிகிச்சை செய்த வரலாறு கிடையாது.

ஏழை மக்கள், தனியார் மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெறுவதற்கான காப்பீட்டுத் தொகை ரூபாய் 2 இலட்சத்திலிருந்து ரூபாய் 5 இலட்சமாக உயர்த்தியிருக்கின்றோம்.

கஜா புயல், ஒக்கி புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கிய அரசு அம்மா அரசு.

அத்திக்கடவு–அவிநாசித் திட்டத்திற்கு மிகச் சிறப்பாக உங்கள் ஆசியோடு இன்றைக்கு அடிக்கல் நாட்டப்பட்ட நிகழ்ச்சிக்கு வருகை புரிந்துள்ள அத்தனை விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் விவசாய சங்க பிரதிநிதிகளுக்கும், இந்த நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்த அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் நன்றி

தெரிவித்து, நல்லாறு–ஆனை மலை திட்டத்தை நிறைவேற்ற வைக்கப்பட்ட கோரிக்கைக்கு கேரள அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தி, அத்திட்டத்தை நிறைவேற்ற அம்மாவினுடைய அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்று தெரிவித்து, நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**